2. விதி 82-ன் கீழ் அமைச்சரின் விளக்க உரை.

ஒரு வினவிற்கு விடை குறித்து.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இடையில் கண் சிகிட்சை முகாம் பற்றிய துணைக் கேள்விக்கு பதிலளிக்கிறபோது பொது மக்கள் தந்த நன்கொடைகள் என்கின்ற வகையில் ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் என்று நான் தெரிவித்தேன். அப்படி ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வசூலானது தொழு நோய் மருத்துவ இல்லங்கள் அமைக்கிற அந்தப் பணிக்குத்தான். ஏறத்தாழ 45 அல்லது 50 இலட்சம் ரூபாய் அளவுக்குத்தான் கண் சிகிட்சை திட்டத்திற்காக நிதி கிடைத்தது. மிச்சம் அரசாங்கச் செலவிலேதான் பெரும்பாலும் நடைபெறுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : * * *

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : நான் அனுமதித்தது அந்தத் தீர்மானமல்ல. இன்னொரு தீர்மானம். நான் அனுமதித்ததைப் பற்றித் தான் உறுப்பினர் அவர்கள் பேசப்போகிறார்கள் என்று அவர் எழுந்ததும் நான் நினைத்தேன். ஆனால் வேறு தீர்மானத்தைப் பற்றி உறுப்பினர் அவர்கள் பேசிவிட்டார்கள். நான் அனுமதித்துள்ள தீர்மானத்தை நான் படிக்கிறேன். அப்புறம் உறுப்பினர் அவர்கள் பேசலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : நான் முதலில் பேசியது அலுவலக நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறுமா ?

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முதலில் பேசியது அலுவலக நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறாது. தேவையும் இல்லை.

3. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

(1) 100 சத விகித மின் வெட்டினால் தொழிற்சாலைகளில் பணி நிறுத்தம் ஏற்பட்டு தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்து.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அனுமதித்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முதலில் படித்து முடித்து விடுகிறேன். 100 சத விகிதம் மின் வெட்டு கொண்டுவரப்பட்டதன் காரணமாக அநேகமாக தமிழ் நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் அனைத்திலும் தற்காலிகமாக பணி நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு இம் மாநிலத்திலுள்ள தொழிற்சாலை தொழிலாளர்கள் அனைவருக்கும் இன்னல் ஏற்பட்டுள்ளது குறித்து. இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான விதிகளின் கீழ் வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுருக்கமாகக் கூற வேண்டும்.

* * * Not recorded as ordered by the Chair.